முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 377/2016

இன்று 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ம் நாள் இன்று இந்த பி.வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மகேந்திரன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் | : | சாமியப்பன் | கிராமம் | : | வெங்கடேசாபுரம் |
| வயது | : | 31 | தாலூக்கா | : | திருப்பூர் வடக்கு வட்டம் |
| நாள் | : | 15-04-2026 | மாவட்டம் | : | திருப்பூர் |

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

நான் வழக்கின் 12 ம் பிரதிவாதியாவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவை ஆகும். அவற்றை நான் நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். எனது தரப்பு சான்றாவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

| வ.எண். | தேதி | ஆவணங்களின் விவரம் | குறிப்பு |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 23.1.1948 | ஆறுமுத்தா என்கிற ஆறுமுகம் அவர்களால் பழனிபோயன் மகன் செல்லமுத்து போயன் அவர்களுக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட கிரய ஆவணம் | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 03.03.1960 | கந்தப்பக் கவுண்டரின் வாரிசுகள் வெங்கடப்ப கவுண்டர், கொண்டசாமி கவுண்டர், மற்றும் சின்னுசாமி என்கிற காங்கய கவுண்டர் ஆகியோர் சேர்ந்து ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை ஆவணம் | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.3 | 16.10.1968 | பூமலூர் அவினாசி கவுண்டன் மகன் பொன்னுச்சாமி கவுண்டர் அவர்கள் தனக்கு பாத்தியப்பட்ட பு.ஏ.1.47-1/2 விஸ்தீரண பூமியில் ஓர் பாகம் பு.ஏ.,0.50 விஸ்தீரண பூமியை தனது மனைவியின் சகோதரி மகள் இந்திரா என்பவருக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவணம் | சான்றிட்ட நகல் |

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2026.04.15 14:18:14 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.